

வேலூர் மாநகர தி.மு.க. செயற்குழு கூட்டம் மாநகர அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் தி. அ. முகமதுசகி தலைமையில் நடந்தது.மாநகர செயலாளர் ப. கார்த்திகேயன், தங்கமணி,மேயர் சுஜாதா,மாமன்ற உறுப்பினர்கள், மாநகர துணை செயலாளர் முன்னா மற்றும் நகர, ஒன்றிய, பகுதி கழக நிர்வாகிகள், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் வருகிற 3ந்தேதி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க செயற்குழுக் கூட்டம் சுரண்டை நகரம் கீழ சுரண்டையில் அமைந்துள்ள கலைஞர் நினைவாலயத்தில் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது.உடன் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மா.செல்லத்துரை, ஆறுமுகச்சாமி,மாவட்ட பொருளாளர் ஷெரீப், துணை செயலாளர் கனிமொழி ஆகியோர் உள்ளனர். இந்தக் கூட்டத்தில் ஜுன் 3 ம் தேதி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை வெகு சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

### கழக துணைப் பொதுச் செயலாளர் இ.பெரியசாமி தலைமையில்

# திண்டுக்கல் கிழக்கு - மேற்கு மாவட்டத்தில் கலைஞர் பிறந்த நாள் விழா!

### மாவட்டச் செயலாளர்கள் அர.சக்கரபாணி – இ.பெ.செந்தில்குமார் அறிக்கை!

*திண்டுக்கல்,ஜூன் 1-*

திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் அர. சக்கரபாணி எம்.எல்.ஏ., மேற்கு மாவட்டச் செயலாளர் இ.பெ. செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:





திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் பொறுப்பையேற்று அரை நூற்றாண்டு காலம் சிறப்பாக செயல்பட்டடு, தமிழக முதலமைச்சராக 19 ஆண்டுகள் பொறுப்பு வகித்து நவீன தமிழகத்தை உருவாக்க அடித்தளம் அமைத்து வளர்த்தெடுத்த நவீன தமிழகத்தின் சிற்பி முன்னாள் முதலமைச்சர், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழாவினை மிகச் சிறப்பாக கொண்டாடும் வகையில் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திண்டுக்கல், கலைஞர் மாளிகையில் 03.06.2026, புதன்கிழமை காலை 9.00 மணியளவில் கழக துணை பொதுச் செயலாளரும் முன்னாள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான இ.பெரியசாமி தலைமையிலும் முன்னாள் உணவுத்துறை அமைச்சரும், திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் அர.சக்கரபாணி,

திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினரும், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளருமான ஐ.பி. செந்தில்குமார் மற்றும் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினரும் வேடசந்தூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளருமான வீரா. எஸ்.டி.சாமிநாதன் ஆகியோர்ின் முன்னிலையிலும் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படம் வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தியும் இனிப்புகள் வழங்கியும் கொண்டாடப் படவுள்ளது.

இந்நிகழ்வில் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை மற்றும் வார்டு நிர்வாகி கள், அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாநகர மேயர், துணை மேயர், மண்டலத் தலைவர்கள் உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள், நகர்மன்ற, பேரூராட்சி மன்ற தலைவர், துணைத்தலைவர் உள்ளிட்ட மன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற முன்னாள் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் என அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டத்திலுள்ள அனைத்து மாநகர, நகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர்களில் உள்ள அனைத்து கிளைகள் மற்றும் வார்டுகள் தோறும் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படம் வைத்து மரியாதை செலுத்தியும், ஒலி மற்றும் ஒளி பெருக்கி அமைத்து கழக கொடியேற்றியும், இனிப்புகள் வழங்கியும் ஏழை எளியவர்களுக்கும், முதியோர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கியும்,

இரத்ததான முகாம், மருத்துவ முகாம் ஆகியவை நடத்தியும் கொண்டாடும் வகையில் சிறப்பாக ஏற்பாடு செய்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவினை மாவட்டம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாட வேண்டும்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர்கள் அர.சக்கரபாணி, இ.பெ.செந்தில்குமார் ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# தேனி வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன் எம்.பி. அறிக்கை!

*தேனி, ஜூன் 1-*

தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன்.எம்.பி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



தேனி வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் இன்று (1.6.2026-திங்கள்கிழமை மாலை 5.00 மணியளவில் தேனி என்.ஆர்.டி நகரில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவகத்தில், மாவட்டக் கழக அவைத்தலைவர் பி.டி செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு, முன்னாள் மற்றும் இந்நாள் நாடாளுமன்ற,சட்டமன்ற உறுப்பினர்கள்,மாவட்ட கழக நிர்வாகிகள் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர் கழக, பேரூர்கழக, நிர்வாகிகள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள்,கழக மூத்த முன்னோடிகள்,அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :வருகின்ற 3.6. 2026 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா தொடர்பாக,

கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளரும் தேனி நாடாளுமன்ற உறுப்பினருமான தங்க தமிழ்ச்செல்வன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### செஞ்சி கிழக்கு ஒன்றியத்தில்

# 100க்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சியினர் தி.மு.க.வில் இணைந்தனர் !

### மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில்

*செஞ்சி, ஜூன் 1-*

செஞ்சி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் 100க்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சியினர் அக்கட்சியிலிருந்து விலகி விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர் .

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றியம் நரசிங்க ராயன் பேட்டை ஊராட்சி மாற்றுக் கட்சியைச் சேர்ந்த முஹம்மத் ஷப்பீர் அஹமத் ,முஹம்மத் சமீர் ஆகியோர் தலைமையில் மாற்றுக் கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் சையத் ஷாஜகான், தஸ்தகீர் உசேன் ஷெரிப், ஷேக் ஜாபர், ஷேக்காதர், கௌதம், முபாரக், யாசின் சேட், நவாஸ் ஷெரிப் , சௌகத் அலி , ரஹமான், ஹாஜி பாஷா, உசேன் கான், பியாருஜான், அன்சாரி, சௌக்கார், அமீன் அப்பாஸ், அன்சாரி, அசேன் கான், சம்சுதீன், இம்ரான், சையத் சல்மான், ஜமால் பாஷா,பிஸ்மில்லஹ், ஜியாவுல் ஹக், முஸ்தபா, சையத் மஹபூப், ஷேக் சாதிக், ஷாக்கீர், சம்பத், மொக்தியார், அப்துல் சலாம், அபுசாலின், அப்துல் ஆஜம், சையத் இர்பான், அப்துல் குத்தூஸ்,முஹம்மத் ஷரீப், நாசர், அல்தாப்பாஷா உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சி நிர்வாகிகள் அக்கட்சியில் இருந்து விலகி செஞ்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்.

திமுகவில் இணைந்த அனைத்து மாற்று கட்சி நிர்வாகிகளுக்கும் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் சால்வை அணிவித்து வரவேற்று வாழ்த்து தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயக்குமார், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியர் அலிமஸ்தான், ஒன்றிய அவைத் தலைவர் வாசு மாவட்ட பிரதிநிதி அய்யா துரை , துணைச் செயலாளர் செல்வமணி , முன்னாள் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ரிஸ்வான், நரசிங்க ராயன்பேட்டை ஊராட்சி மன்ற தலைவர் பிலால், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாலகிருஷ்ணன், துணைத் தலைவர் ராமு, தொண்டரணி பாஷா, முன்னாள் துணை செயலாளர் ஆளவந்தார் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கடலூர் மாநகர தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம், கழக அலுவலகத்தில்,மாநகரக் கழகச் செயலாளர் கே. எஸ்.ராஜா தலைமையில் நடைப்பெற்றது.முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி,மேயர் சுந்தரி ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் விக்கிரமன் உள்ளிட்ட மாநகர கழக நிர்வாகிகள், பகுதிச் செயலாளர்கள் கலந்துக் கொண்டனர்.

# மதுரை தெற்கு மாவட்டம் முழுவதும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா !

### மாவட்டச்செயலாளர்சேடபட்டிமு.மணிமாறன்எம்.எல்.ஏ.வேண்டுகோள்!

*மதுரை, ஜூன் 1-*

மதுரை தெற்கு மாவட்டம் முழுவதும் தமிழின தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த தினத்தை கழகத்தினர் கிராமம் கிராமமாக இனிப்புகள், நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாட வேண்டும் என மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார், அதன் விபரம்



தமிழ்நாட்டு வளர்ச்சிக்கு தொலைநோக்கு பார்வையுடன் பல்வேறு சாதனை திட்டங்களை கொண்டு வந்த செம்மொழி நாயகர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த தினத்தை கழகத்தினர் சிறப்பாக கொண்டாட வேண்டும் என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்

அதன்படி மதுரை தெற்கு மாவட்ட கழகத்தினர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த தினத்தை செம்மொழி நாளாக கொண்டாடும் வகையில் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழகங்களுக்கு உட்பட்ட அனைத்து கிராமங்களிலும் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்கள் மற்றும் கழகத்தினருக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாட வேண்டும்

மேலும் அன்னதானம், நலத்திட்ட உதவிகள் என ஏழை எளியோருக்கு பல்வேறு சேவைகளை செய்திட வேண்டுமென தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ. கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்

### தென்காசி குற்றாலம் அருவி பகுதிகளில்

# சுற்றுலாத்துறை மூலம் பல்வேறு வளர்ச்சிப் பணிகள்!

### மரு.ராணி ஸ்ரீகுமார் எம்.பி.நேரில் ஆய்வு!

*தென்காசி, ஜூன் 1-*

தென்காசி மாவட்டம் குற்றாலம் அருவிப் பகுதிகளில் சுற்றுலாத் துறை மூலம் பல்வேறு வளர்ச்சி பணிகள் நடைபெற்று வருகிறது.

இதில் மெயின் அருவியில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தமிழ்நாட்டின் புகழ்பெற்ற சுற்றுலாத்தலமான குற்றாலத்தில் உள்ள மெயின் அருவி,புலியருவி மற்றும் ஐந்தருவி ஆகிய அருவி பகுதிகளில் சுற்றுலாத்துறை மூலம் பல கோடி மதிப்பில் பல்வேறு வளர்ச்சி பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் குற்றாலம் மெயின் அருவியில் சுற்றுலாப் பயணிகள் நலன் கருதி பழைய பாதுகாப்பு வளைவை அகற்றிவிட்டு, புதிதாக பாதுகாப்பு வளைவு அமைக்கப்பட்டு வருகிறது.மேலும் பெண்கள் உடை மாற்றும் அறை,நவீன சுகாதார வளாகம்,வாகன நிறுத்தும் இடத்தில் உள்ள சுற்றுச் சுவர் கட்டப்பட்டு வருகிறது.

குற்றாலம் மெயின் அருவியில் நடைபெற்று வரும் இப்பணிகளை தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் பார்வையிட்டு ஆய்வுப் பணி மேற்கொண்டார். அப்போது அங்கு பணியில் ஈடுபட்டிருந்த அரசு ஒப்பந்ததாரர் மற்றும் பேரூராட்சி பொறியாளர்களிடம் குற்றால சீசன் விரைவில் துவங்க இருப்பதை முன்னிட்டு பணிகளை விரைந்து முடிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

நிகழ்வில் தென்காசி கிழக்கு ஒன்றிய செயலாளர் அழகு சுந்தரம் குற்றால நாதர் சுவாமி கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர்கள் வீரபாண்டியன், சுந்தர்ராஜன் மாவட்ட பிரதிநிதி வல்லம் செல்வம் மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் சுரேஷ், ஹரி மற்றும் பேரூராட்சி பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



தென்காசி குற்றாலம் மெயின் அருவியில் சுற்றுலாத் துறை மூலம் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி பணிகளை தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் கழக நிர்வாகிகள் அழகு சுந்தரம்,சுரேஷ், ஹரி, அறங்காவலர்கள் வீரபாண்டியன்,சுந்தர்ராஜன் ஆகியோர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மு. சண்முகம்

### ஜூன் 1 (1987)



தந்தை பெரியாரின் நம்பிக்கைக்குரிய தொண்டராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, பேரறிஞர் அண்ணாவின் கவனத்தைக் கவர்ந்து அவரது இதயத்திலும் தனக்கென ஒரு இடத்தை பிடித்துக் கொண்டவர்.

கழகம் துவங்கிய காலத்திலிருந்து தலைமைக் கழகத்தில் பொறுப்பாளராக பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

'நம்நாடு' திங்கள் இதழாக வெளிவந்தபோதும்,'கழகக் குரல்" வார இதழிலும், 'தோழன்' என்ற புனைப்பெயரில் இவர் எழுதிய கட்டுரைகள் ஏராளம்.

1976ல் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு, மிசா காலத்தில் சோதனை ஏற்பட்டபோது தான் 'தோழன்' என்ற பெயர் அவருக்கு எவ்வளவு பொருத்தம் என்பது புரிந்தது என தலைவர் கலைஞர் கூறியுள்ளார். மேலும், தனது இரங்கல் உரையில் "கழகத்தின் வரலாற்றுக் குறிப்புப் புத்தகம் எழுதப்படாத புத்தகம் சண்முகம்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**